முருகப்பெருமான் துணை

**மகான் இசைஞானியார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.04.2021, திங்கட்கிழமை

1. வரமாக வந்த வள்ளலே
வையகத்தில் ஞானச் சுடரேற்றி
அறமாக வளரும் அண்ணலே
ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் யோகபிரசன்ன ஆசி
இனிமைபட சார்வரி சேல் திங்கள்
இயம்பிடுவேன் முப்பான் திகதி சோமவாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 30ம் நாள், 12.04.2021 திங்கட்கிழமை)
3. வாரமதில் இசை ஞானியார் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமில்லா மக்கள் சமூகம்
சுத்தநெறி வழி வருகவே காணக் கூடும்
4. கூடவே அரங்கன் காட்டும்
குறைவிலா ஞான வழியும்
நாடெங்கும் சுடராகப் பரவிட
ஞான பூமியாகமாற்றம் கண்டு
5. கண்டுமே கலியிடர் விலகும்
கருணை நிறைந்த உலகமாக
தொண்டர் படைகள் பெருக
தூய சேவை வளர காணும்
6. காணவே மக்களிடை மனபலம்
கண்ணியமிக்க குண நலமும்
தானாக அரங்க ஞானியரின்
தவசக்தி பரவவே உண்டாகும்
7. ஆகவே அரங்கன் அருளும்
அற்புத ஞானிகள் பூசை வழி
யுகமக்கள் வந்து இணைந்து
உயர்தீட்சை ஏற்று வர
8. வருகவே சக்திநிலை கூடி
வஜ்ரம் போல் திடநிலை யாகி
முருகப்பெருமானே அருளும்
முழுமை தரும் தர்ம சேவை ஆற்றி
9. ஆற்றியே கலிஇடர் வெல்லும்
ஆற்றல்மிக்க ஞானவான்களாகி
மாற்றம் செய்வர் யுகத்தில்
மகத்துவம்பட ஞானம் அடைவர்

10. அடைவரே யோக சித்தியும்
அளவிலா தரும வேலி வழி
சோடைவாரா பாதுகாப்பும்
சிறப்பும் உயர்வும் காண்பர்

11. காண்கவே கலியில் கிடைத்த
கருணைமிக்க ஞானகுருவழி
உண்மை ஆன்மீக வழிவழித்தொடர்ந்து
உலகோர் கடைத்தேற்றம் பெறுவர்

யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—